நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No. 44/2022**

<u>அ.சா.4 (LW – 5 ) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நித்தியானந்தன் | த/பெ. | : | சீனிவாசன் |
| கிராமம் | : | நாகமநாயக்கன்பாளையம் | வட்டம் | : | கொடுமுடி |
| தொழில் | : | விவசாயம் | வயது | : | 47 |

<u>01–12–2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.</u>

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> (சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).

நான் நாகமநாய்க்கன்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான், எனது மனைவி உஷா, எனது மகன் அனிரூத் ஆகியோர்கள் எங்கள் வீட்டில் வசித்து வருகிறோம். அ.சா.1 எனது அத்தை ராஜேஸ்வரி எனது ஊரில் தான் குடியிருந்து வருகிறார். எனது மாமா பெயர் கோபாலன். அ.சா.1 ராஜேஸ்வரிக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளார்கள். ராஜேஸ்வரியின் மகன் பெயர் கண்ணன். அ.சா.2 சிந்துதேவி தான் ராஜேஸ்வரியின் மகள் ஆவார். ராஜேஸ்வரியின் மகன் கண்ணன் வெளிநாட்டில் வசித்து வருகிறார். அ.சா.2 சிந்துதேவி கோயம்புத்தூரில் வசித்து வருகிறார். கோபாலன் விவசாயம் வசித்து வந்தார். 01–09–2021ம் தேதியில் காலை கொடுமுடி ரஜினி மருத்துவமனைக்கு சென்றுவிட்டு வந்து மாட்டு கட்டுதத்தாரைக்கு செல்வாக ராஜேஸ்வரியிடம் சொல்லிவிட்டு மாலை 6 மணிக்கு கோபாலன் வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ளார். கோபாலன் ரொம்பநேரம் வரவில்லை என்று ராஜேஸ்வரி எனக்கு போனில் இரவு 8.30 மணியளவில் தகவல் சொன்னார். நான் எனது அத்தை வீட்டிற்கு சென்று அக்கம்பக்கத்தில் தேடி பார்த்தோம் காணவில்லை. மாட்டுக்கட்டுத்தாரையிலும் கோபாலன் காணவில்லை. மறுநாள் காலையில் கோபாலனின் மருமகன் மற்றும் ஊர்காரர்களுடன் சேர்ந்து தேடிப்பார்த்தோம். கோபாலனின் நண்பர் குணசேகரனும் எங்களுடன் தேடினார். கோபாலன் வீட்டில் இருந்து சுமார் 500 மீட்டர் துரத்தில் உள்ள வெங்கட்ராமன் என்ற ரவியின் கரும்பு காட்டில் கோபாலன் பிணமாக

கிடப்பதாக குணசேகரன் எங்களிடம் வந்து சொன்னார். அதன்பிறகு நாங்கள் வெங்கட்ராமன் என்ற ரவியின் கரும்பு காட்டிற்கு சென்று பார்த்தோம். கோபாலன் மல்லாக்க படுத்த நிலையில் இறந்து கிடந்தார். அவர் இறந்துபோன இடத்திற்கு அருகில் உடைந்துபோன பீர்பாட்டில் கிடந்தது. கோபாலனின் வாயில் மண் இருந்தது, அவரது முகத்தில் காயங்கள் காணப்பட்டது, முகத்தில் மண்கள் இருந்ததால் சரியாக தெரியவில்லை. ராஜேஸ்வரி கொடுமுடி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார். நானும் ஊரில் தான் இருந்தேன். கோபாலனின் பிரேதத்தை நான் அடையாளம் காட்டினேன். கோபாலனுக்கு கடன் ஏற்பட்டு, அதனை அவரது மகன் அடைத்துவிட்டார். கோபாலனின் அண்ணனுக்கும், கோபாலனுக்கும் வீடு சம்பந்தமாக பிரச்சனை இருந்ததாக கேள்விப்பட்டேன். எதிரியை நான் பார்த்ததில்லை. ஓரின சேர்க்கை பிரச்சனையால் ஏதோ ஒரு பையன் கோபாலனை கொலை செய்துவிட்டதாக ஊரில் சொன்னார்கள். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

02-09-2021ம் தேதியில் கோபாலனின் வீட்டின் அருகில் வைத்து காலை சுமார் 11 மணியளவில் போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னை ஒரு முறை தான் விசாரித்தார்கள். 01-09-2021ம் தேதி இரவு 8.30 மணியளவில் எனது அத்தை எனக்கு போன் செய்து கோபாலன் காணவில்லை என சொல்லிய விபரத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 01-09-2021ம் தேதி இரவே கோபாலனை நாங்கள் தேடியதாக போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் கோபாலனின் பிரேதத்தை பார்த்த போது தான் எனது அத்தை ராஜேஸ்வரி, சிந்துதேவி, மோகன்பிரசாத் ஆகியோர்களும் பார்த்தார்கள் என்றால் சரிதான். ராஜேஸ்வரி, சிந்துதேவி, மோகன்பிரசாத் ஆகியோர்கள் பார்க்கும்போதும் பிரேதத்தின் முகத்தில் மண்கள் ஒட்டியிருந்தது என்றும், அதனால் அவர்களாலும் முகத்தில் இருந்த காயங்களை சரியாக பார்க்க முடியவில்லை என்றால் சரிதான். கோபாலன் யார்யாரிடம் எல்லாம் கடன் வாங்கயிருந்த விபரம் என்னால் சொல்லமுடியுமா என்றால் முடியாது. கோபாலனுக்கு யார்யாருடன் விரோதம் இருந்து வந்தது என்றால் தெரியாது. வீடு சம்பந்தமாக கோபாலனுக்கும், அவரது அண்ணன் ராமமூர்த்திக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது என்றும், அதனால் அவர்களுக்கு இடையே முன் விரோதங்கள் இருந்து வந்தது என்றும் சொன்னால் அவ்வாறு தான் கேள்விப்பட்டேன். ஓரின சேர்க்கை பிரச்சனையால் கோபாலன் கொலை செய்யப்பட்டார் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க ஓரின

**சேர்க்கை பிரச்சனையால் கோபாலன் கொலை செய்யப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.**

**<u>அரசு தரப்பு மறு விசாரணை</u> – இல்லை.**

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br><br>II Addl. Sessions Judge, Erode. |

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No. 44/2022**

<u>அ.சா. 5 (LW – 8 ) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காந்தி | த/பெ. | : | ஜெகநாதன் |
| கிராமம் | : | நாகமநாய்க்கன்பாளையம் | வட்டம் | : | கொடுமுடி |
| தொழில் | : | விவசாயம் | வயது | : | 47 |

<u>01–12–2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.</u>

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u> (சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).

நான் நாகமநாய்க்கன்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அ.சா.1 ராஜேஸ்வரி எனது ஊரை சேர்ந்தவர். ராஜேஸ்வரியின் கணவர் பெயர் கோபாலன். கோபாலன் விவசாயம் வேலை செய்து வந்தார். ராஜேஸ்வரிக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளார்கள். ராஜேஸ்வரியின் மகன் பெயர் கண்ணன். கண்ணன் வெளிநாட்டில் வசித்து வருகிறார். அ.சா.2 சிந்துதேவி தான் ராஜேஸ்வரியின் மகள் ஆவார். அ.சா.4 நித்தியானந்தன் எனது ஊரை சேர்ந்தவர் தான். அ.சா.3 மோகன்பிரசாத் என்பவர் அ.சா.2 சிந்துதேவியின் கணவர் ஆவார். மாட்டுககட்டுத்தரையில் மாடு கன்னுபோட்டதை பார்ப்பதற்காக சென்ற கோபாலன் வீடு திரும்பவில்லை என்று 01–09–2021ம் தேதியில் இரவு சுமார் 10 மணிக்கு மேல் அ.சா.1 ராஜேஸ்வரி போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார். நான், நித்தியானந்தம், பக்கத்தில் இருந்தவர்கள் சுகர் மற்றும் இருதய கோளாரின் காரணமாக மயக்கம் போட்டுவிட்டாரா என்று கோபாலனை அக்கம்பக்கத்தில் தேடினோம். ஆனால் கோபாலன் கிடைக்கவில்லை. நாங்கள் அவரது வீட்டிற்கு சென்றுவிட்டோம். கோபாலனின் மகளும், மருமகனும் ஊருக்கு வந்துவிட்டார்கள். மறுநாள் காலையில் நாங்கள் எல்லோரும் தேடினோம். எங்களுடன் கோபாலனின் நண்பர் குணசேகரனும் சேர்ந்து தேடினார். கோபாலனின் மாட்டுக்கட்டுத்தாரைக்கு அருகில் உள்ள ரவி என்ற வெங்கட்ரமனின் கரும்பு காட்டில் கோபாலனின் பிரேதம் கிடப்பதாக 02–09–2021ம் தேதி காலை சுமார் 10 மணியளவில்

குணசேகரன் பார்த்துவிட்டு சொன்னதாக கோபாலனின் மருமகன் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொன்னார். நாங்கள் எல்லோரும் கோபால் இறந்து கிடந்த கரும்பு காட்டிற்கு சென்றோம். ராஜேஸ்வரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். தலை கிழக்கு பக்கம், கால் மேற்கு பக்கம் கிடந்த நிலையில் மல்லாக்க படுத்த நிலையில் கோபாலன் இறந்துகிடந்தார். முகத்தில் மண் போடப்பட்டிருந்ததால் சரியாக காயம் தெரியவில்லை. தலையில் பீர் பாட்டிலால் அடித்த காயம் இருந்தது. அந்த இடத்தில் ஒரு ஜோடி செருப்பு இருந்தது, அந்த இடத்தில் உடைந்துபோன பீர் பாட்டில் கிடந்தது. கோபாலனை கொலை செய்துவிட்டதாக சொன்னார்கள். எதனால் என்று தெரியவில்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்த பின்பு காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார். அந்த சமயத்தில் நானும் சம்பவ இடத்தில் தான் இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை பிரேதத்தை அடையாளம் காட்ட சொல்லவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

02-09-2021ம் தேதி காலை சுமார் 11.20 மணியளவில் காவல் ஆய்வாளர் பிரேதம் கிடந்த இடத்தில் வைத்து காவல் ஆய்வாளர் விசாரித்தார். போலீசார் என்னை ஒரு முறை தான் விசாரித்தார்கள். இன்று நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் தான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேனா என்றால் அதே மாதிரி தான் சொன்னேன். மோகன்பிரசாத் எதத்னை மணிக்கு போன் செய்து கோபாலன் இறந்துகிடந்த விபரத்தை என்னிடம் சொன்னார் என்பது பற்றி போலீஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். காலை சுமார் 9.30 மணிக்கு மேல் மோகன்பிரசாத் எனக்கு போன் செய்திருப்பார். போலீஸ் விசாரித்த போது கோபாலனின் தலை கிழக்கு பக்கமும், கால் மேற்கு பக்கமும் இருந்தது என்ற விபரத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை, அவர்களாகவே பார்த்தார்கள். நான் பார்த்தபோது கோபாலனின் தலையில் இரத்தம் வழிந்தமாதிரி இருந்தது. நான் பார்த்தபோது கோபாலனின் தலையில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது என்றால் தவறு. கோபாலனின் முகம் மற்றும் தலையில் காயங்கள் இருப்பது சரியாக தெரியாத வகையில் மண்கள் போடப்பட்டிருந்தது. நான் பிரேதத்தை பார்க்கும்பொழுது தான், நித்தியானந்தன், ராஜேஸ்வரி, சிந்துதேவி மற்றும் மோகன்பிரசாத் ஆகியோர்களும் சேர்ந்து பார்த்தார்கள் என்றால் சரிதான். பிரேதத்தில் மண்கள் ஒட்டியிருந்ததால் அவர்களாலும் பிரேதத்தில் எங்கெங்கு காயங்கள் இருந்தது என்பதை உறுதியாக சொல்லமுடியாது என்றால்

சரிதான். போலீசார் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் பொய்யாக எனது முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் தவறு.

<u>அரசு தரப்பு மறு விசாரணை</u> – இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

II Addl. Sessions Judge, Erode.